# *மலைப்பிரசங்கம் 06 இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்*

***மத்தேயு 5:3-10, ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. 4. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள். 5. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். 6. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். 7. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள். 8. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். 9. சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். 10. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.***

### *மலைப்பிரசங்கத்தின் அமைப்பு*

*இதற்கு நாம் பதிலளிக்கவேண்டுமானால் மலைப்பிரசங்கத்தின் அமைப்பை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.*

*மொத்தம் எட்டு போதனைகளை மலைப்பிரசங்கம் உள்ளடக்கியுள்ளது.*

*1. ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*2. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்.*

*3. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*4. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*5. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*6. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*7. சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்.*

*8. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்.*

*10 ஆம் வசனம் கடைசி வசனம். 11ஆம் வசனமானது அதின் விரிவாக்கம்.*

*முதலாவது போதனையும் (வச. 3) கடைசி போதனையும் (வச. 10) ஒரே மாதிரியான உறுதியைக் கொடுக்கிறது: "பரலோகராஜ்யம் அவர்களுடையது."*

*இந்த மலைப்பிரசங்கத்தின் போதனைகளை நந்நான்கு போதனைகள் விகிதம் இரண்டாய் பிரிக்கலாம்:*

*முதல் நான்கு போதனைகள் முதல் பிரிவு.*

*கடைசி நான்கு போதனைகள் இரண்டாம் பிரிவு.*

*முதல் பிரிவில் இடம்பெற்றுள்ள நான்கு போதனைகளும் வெறுமையை மையப்படுத்துகிறது.*

*ஆவியில் எளிமை (வச. 3),*

*நம்முடைய பாவத்தைக் குறித்து துக்கிப்பது (வச. 4),*

*நாம் விமர்சிக்கப்படும்போது சாந்தகுணமாயிருப்பவர்கள் (வச. 5),*

*நீதியின் மீது பசிதாகம் கொண்டவர்கள் (வச. 6)*

*இந்த முதல் நான்கு போதனைகளும் உடைக்கப்பட்ட, துக்கிக்கும், நீதியின் மேல் பசிதாகம் கொண்ட மென்மையான நபர்களைக் குறித்துப் போதிக்கிறது.*

*கடைசி நான்கு போதனைகளும் இரக்கமுள்ள, தங்கள் நீதியின் நிமித்தம் துன்பப்படுகிற மெய்யான சமாதானத்தை அறிவிக்கிறவர்களைக் குறித்து போதிக்கிறது.*

*அவர்கள் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டவைகள் வழிந்தோடுகிறது.*

*ஆவியில் எளிமையுள்ளவர்கள் இரக்கத்தின் தேவையை அறிந்து அந்த இரக்கத்தை மற்றவர்களிடம் செயல்படுத்துவார்கள்.*

*3ஆம் வசனமும் 7ஆம் வசனமும் தொடர்புடையது.*

### *1. **இரக்கம் என்றால் என்ன?***

*இரக்கம் என்பதற்கு பயன்படுத்தப்படுகிற "**எளீமோனெஸ்**" என்ற வார்த்தைக்கு "இரக்கம் செய்யுங்கள்" என்று பொருள்.*

*மேலும்,*

- *பாதிக்கப்பட்டவர்கள் மீதான இரக்கம்.*
- *துயரப்படுகிறவர்களுக்கு உதவிசெய்தல்*
- *துன்பப்படுகிறவர்களை மீட்டெடுத்தல்*

*அது கரிசணையோடு செய்யப்படவேண்டியது.*

*அது மன உருக்கத்தோடு செய்யப்படவேண்டியது.*

*இங்கே தெய்வீகமான ஒன்றைக் குறித்து நாம் பேசிக்கொண்டிருக்கிறோம்.*

*இது ஒரு பாவியான மனிதன் மற்றவர்கள் மீது காண்பிக்கிற பரிதாபமில்லை.*

*இது மெய்யான, நிஜமான, சுத்தமான, சுயநலமில்லாத தெய்வீக இரக்கம். உபத்திரவத்தில், வியாகுலத்தில், தேவையோடிருக்கிற தரித்திரர்கள் மீது காண்பிக்கப்படவேண்டியது.*

*எபிரெயத்திலிருந்து கிரேக்கத்திற்கு மொழிபெயர்க்கப்பட்ட செப்டுவஜின்ட்டு பயன்படுத்தியுள்ள கிரேக்க வார்த்தை, "**எளீயோ.**" இதை மொழிபெயர்ப்பது சாத்தியமில்லை.*

*இதை ஒரே வார்த்தையில் நாம் சுருக்கலாம். ஆனால் பழைய ஏற்பாட்டின் ஆசிரியர்கள் அவ்வப்போது இந்த வார்த்தையை "இரக்கமுள்ள அன்பு" என்பது போன்ற அர்த்தங்களில் பயன்படுத்தியுள்ளனர். இரக்கமுள்ள அன்பு என்பது ஒரு குறிக்கோளுடனான செய்கையை வலியுறுத்துகிறது.*

***இரக்கமும் மன்னிப் :***

*இது சாதாரணமாய் மற்றவர்களின் மீது காண்பிக்கிற பரிவோ அல்லது அக்கறையோ இல்லை. இது மற்றவர்களின் தோலுக்குள் நேரடியாய் நுழைந்து அவர்களின் உணர்வுகளை அனுபவித்து, அவர்களின் வேதனையை நாம் உணருவதை வலியுறுத்துகிறது. இது கடந்துபோகக்கூடிய தற்காலிகமான பரிதாப உணர்வுகளுக்கு அப்பாற்பட்டது. இது உணர்வுகளை தத்தெடுப்பது. மற்றவர்களின் வேதனைகளை புரிந்துகொண்டு அவர்களை அதிலிருந்து விடுவிக்க முயற்சிப்பது.*

***தீத்து 3:5, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.***

*ஆகையால் மன்னிப்பிற்கு பின்பாக இரக்கம் இருக்கிறது.*

***மன்னிப்பு என்பது இரக்கத்தின் கனி.***

*தேவன் நம்மை இரக்கத்தோடும் மன உருக்கத்தோடும் அன்போடும் கண்ணோக்குகிறார். நாம் இந்த உலகத்தில் அனுபவிக்கிற அத்தனை சோதனைகளையும் ஆண்டவராகிய இயேசு மனிதனாகி இந்த உலகத்தில் வந்துபோது அனுபவித்தார். ஆனாலும் அவர் பாவம் எதுவும் செய்யவில்லை. நம்மைப்போல அவரும் சோதிக்கப்பட்டாலும், அவர் பரிதாபப்படக்கூடிய நிலையில் இருந்ததால், நம்மீது அனுதாபம் காண்பிக்கக்கூடிய இரக்கமுள்ள இரட்சகராய் நமக்கு வெளிப்படுகிறார்.*

*மன்னிப்பிற்கு பின் இரக்கம் இருக்கிறது.*

***எபேசியர் 2:4-6, தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, 5. அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் 6. கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக,***

*இரக்கத்தினாலேயே தேவன் நம்மை இரட்சித்தார்.*

*மன்னிப்பிற்கு நேராய் நம்மை வழிநடத்தும் தேவனுடைய ஒரு தெய்வீக குணாதிசயமே இரக்கம்.*

*உபத்திரவப்படுகிற, ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கைவிடப்பட்ட மக்களுக்கான தேவனுடைய அனுதாபமே இரக்கம்.*

***தானியேல்** 9:10, **ஆனாலும் எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு.***

*அவருடைய இரக்கத்திலிருந்தே மன்னிப்பு வெளிப்படுகிறது.*

***சங்கீதம்** 130 இந்த சத்தியத்தை தெளிவாய் பிரதிபலிக்கிறது.*

***இரக்கமும் அன்பும்.***

***எபேசியர்** 2:4,*

*தேவனுடைய இரக்கமானது அன்பின் வழியாக மன்னிப்பில் வெளிப்படுகிறது.*

*அது அன்பாய் துவங்கி, இரக்கமாகி, மன்னிப்பில் வெளிப்படுகிறது. அன்பு என்பது மிகவும் பரந்து விரிந்த ஒரு சுபாவம். இரக்கத்தைக்காட்டிலும் அதிகமாய் பரந்து விரிந்திருக்கிற ஒரு சுபாவம்.*

- *அன்பு என்பது நலமாய் இருக்கிறீர்களா என்று நம்மை விசாரிக்கும் நண்பனைப் போன்றது.*
- *இரக்கமானது திக்கற்றவர்கள் மீதான பரிவு.*

*அன்பு பெரியது, ஆனால் இரக்கம் என்பது அந்த அன்பின் வெளிப்பாடு.*

- *இரக்கம் என்பது வியாதியஸ்தர்களின் மருத்துவரைப் போன்றது.*
- *அன்பு என்பது சிநேகிதனைப்போன்றது.*

- *அன்பு பாசத்தில் கிரியை செய்கிறது.*
- *இரக்கம் கரிசணையில் கிரியை செய்கிறது.*

- *அன்பு நிலையானது.*
- *இரக்கம் குறிப்பிட்ட தருணங்களில் வெளிக்காட்டப்படுகிறது.*

- *அன்பும் இரக்கமும் வெவ்வேறானது; ஆனால் பிரிக்கமுடியாதது.*
- *இரக்கமும் மன்னிப்பும் வெவ்வேறானது; ஆனால் பிரிக்கமுடியாதது.*

*நீங்கள் இரக்கமுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்றால் மன்னிக்கிறவர்களாய் இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.*

*நீங்கள் இரக்கமுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்றால், நீங்கள் அன்புள்ளவர்களாய் இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.*

*இரக்கமும் கிருபையும்.*

***எலியோஸ்*** *என்ற வார்த்தையானது, பாவத்தின் விளைவுகளாய் கருதப்படுகிற வேதனை, வியாகுலம், மற்றும் இடர்கள் ஆகிவற்றுடன் கிருபையுடன் இடைபடுவதைக் குறிக்கிறது.*

- *இரக்கமானது பாவம் ஏற்படுத்துகிற இக்கட்டான சூழ்நிலையைப் பார்க்கிறது.*
- *கிருபை என்பது அந்த பாவத்தையே பார்க்கிறது.*

*தேவன் நம்முடைய பாவத்திற்கு கிருபை கொடுக்கிறார். அந்த பாவம் நம்மில் ஏற்படுத்தியிருக்கிற அவல நிலைக்காய் இரக்கம் காண்பிக்கப்படுகிறது.*

- *கிருபையானது நம்முடைய குற்றத்திற்கான மன்னிப்பை வாங்கித் தருகிறது.*
- *இரக்கமானது அந்த தண்டனையிலிருந்து மீட்கப்பட்டதற்கான விடுதலையை அனுபவிக்கச் செய்கிறது.*

- *கிருபை முதலாவது வெளிப்பட்டு, நம்மை நம்முடைய குற்ற மனசாட்சியிலிருந்து விடுவிக்கிறது.*
- *இரக்கம் இரண்டாவதாக வெளிப்பட்டு, நம்முடைய தண்டனையிலிருந்து நம்மை விடுதலையாக்குகிறது.*

*இரக்கமும் கிருபையும் வெவ்வேறானது, ஆனால் பிரிக்கமுடியாதது.*

- *இரக்கமானது வலியிலிருந்து நம்மை விடுவிக்கிறது.*
- *கிருபை நம்மை நல்ல நிலைக்கு உயர்த்துகிறது.*

## இரக்கமும் நீதியும்.

*இரக்கமும் நீதியும் ஒன்றாய் பயணிக்கிறது.*

*தேவனுடைய நீதியை பாதிக்கக்கூடிய வகையில் அவர் இரக்கம் காண்பிக்க முடியாது. இரக்கம் என்பதும் மற்ற எல்லா சுபாவங்களைப்போல தேவனிடத்திலிருந்து வெளிப்படக்கூடிய ஒரு பரிசுத்த சிந்தை. அது தேவனுடைய நீதியையும் பரிசுத்தத்தையும் எந்தவிதத்திலும் நிராகரிப்பதில்லை. இது பாவத்தையும் நீதியையும் நிராகரிக்கக்கூடிய ஒரு வெறுமையான உணர்ச்சிவசப்படும் நிலையல்ல. அப்படிப்பட்ட இரக்கமானது நீதியைத் தவிர்க்கும் தவறான மற்றும் பரிசுத்தமற்ற இரக்கம்.*

*தேவன் இரக்கமுள்ளவராய் செயல்படவேண்டுமாகில் அவருடைய நீதியை பிரதிபலிக்க வேண்டியுள்ளது. அவர் தன்னுடைய நீதியை சிலுவையில் தொங்கிய இயேசுவின் மீது ஊற்றி, நீதியும் பரிசுத்தமுமான தேவனுக்கும் அவருடைய நியாயப்பிரமாண விதிமுறைகளுக்கும் மீறிய குற்றத்தினால் தண்டனைக்கு உள்ளான மக்களுக்கு இரக்கம் செய்யும்பொருட்டு தேவன் அதைச் செய்கிறார்.*

*நம்முடைய செய்கைகளுக்கான பலனை நாம் அனுபவிப்போமாகில், நாம் இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பையே அடைவோம்.*

***யாக்கோபு 2:13, ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்.***

*நீங்கள் இரக்கங்காட்டுகிறவர்களாய் இருந்தால் நீங்கள் நியாயந்தீர்க்கப்படீர்கள்.*

*தேவனுடைய பிள்ளைகளாகிய உங்களுக்கு இந்த தெய்வீக இரக்கம் காண்பிக்கப்படுமாகில் நீங்கள் ஆக்கினைக்கு தப்பித்துக்கொண்டவர்கள் என்பதை நீங்கள் நிரூபிக்கிறவர்கள். உங்கள் நீதி சரிகட்டப்பட்டது. தண்டனை கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது.*

*இரக்கம் என்பது மன்னிப்பைக் காட்டிலும் பெரியது, அன்பைக்காட்டிலும் சிறியது, கிருபையிலிருந்து வித்தியாசப்படுவது மற்றும் நீதிக்கு அப்பாற்ப்பட்டது அல்ல.*

***சுருக்கவுரை:***

*இந்த இரக்கஞ்செய்கிறவர்கள், தீங்கிழைக்கக்கூடிய நபர்களினால் ஏற்படும் அவமானத்தைப் பொறுத்துக்கொள்ளுகிறவர்கள் மாத்திரமல்ல, அந்த தீங்கிழைக்கிறவர்கள் தங்கள் பாவத்தினால் மரிக்காதபடிக்கு அவர்களையும் நேசிப்பவர்கள்.*

*இவர்களே இந்த தெய்வீக இரக்கத்திற்கு பாத்திரவான்கள். அதின் அவசியத்தை உணர்ந்தவர்கள். அதை மற்றவர்களுக்கு காண்பிப்பதில் தீவிரமாய் செயல்படுபவர்கள்.*

***மத்தேயு 18ஆம்** அதிகாரத்திலிருக்கிற உவமை.*

*ராஜாவினிடத்தில் அதிக தொகை கடன்பட்டிருக்கிற ஒருவன் அந்த கடனை திருப்பி செலுத்த வழியில்லாததினால் அவனை தண்டனைக்கு உட்படுத்தும்படிக்கு ராஜா கட்டளையிடுகிறார். அவன் ராஜாவுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து ராஜாவே என் மேல் இரக்கமாயிரும் என்று வேண்டிக்கொண்டான். ராஜாவும் அவனுடைய எல்லா கடன்களையும் அவனுக்கு மன்னித்துவிடுகிறார்.*

*இரக்கத்திற்கான ஒரு அழகான உதாரணம்!*

*ஆனால் கடன்கள் மன்னிக்கப்பட்ட அந்த மனிதன் கடந்துபோகும்போது அவனிடத்தில் குறைவான தொகை கடன்பட்டிருக்கிற வேறொரு மனிதனைக் கண்டு அந்தத் தொகையை திருப்பி செலுத்தும்வரைக்கும் அவனை சிறையில் அடைத்து அவனிடத்தில் இரக்கங்காண்பிக்க மறுக்கிறான்.*

*ராஜா அவனை மீண்டும் அழைப்பித்து அவன் இரக்கமாயிருக்கும்வரையில் அவனை சிட்சித்து சிறையிலடைப்பதாக உவமை முடிகிறது.*

*இரக்கத்தைப் பெற்றுக்கொண்டு அதை செயல்படுத்தத் தவறுகிற பட்சத்தில் தேவன் உங்களையும் சிட்சிப்பார்.*

*மற்ற எல்லா பாவிகளைப் போலவும் நீங்களும் நிர்வாணமாயும், குருடராயும் இருந்தீர்கள். ஆனால் உங்களுக்கு நன்மை செய்யும்பொருட்டு தேவன் உங்களுக்கு மனமிரங்கி, தேவனுடைய பரிசுத்த நீதிக்கு விரோதமான உங்களுடைய எல்லா கடன்களையும் கிருபையாய் மன்னித்தார். நீங்களும் மற்றவர்களுக்கு இரக்கஞ்செய்யுங்கள்.*

*நீங்கள் மற்றவர்களிடத்தில் இரக்கமுள்ளவர்களாய் செயல்படும்பொருட்டு, தேவன் தன்னுடைய இரக்கத்தினால் உங்களுடைய இருதயத்தை மாற்றியிருக்கிறார்.*

***சங்கீதம் 37:21, துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற்போகிறான்; நீதிமானோ இரங்கிக்கொடுக்கிறான்.***

***யார் இரக்கமுள்ளவர்கள்?***

*நாம் சிலவேளைகளில் ஒன்றைப் புரிந்துகொள்ள அதற்கு எதிரான விஷயங்களை புரிந்துகொள்ளுதல் அவசியமாகிறது.*

***மத்தேயு 9:10-13, பின்பு அவர் வீட்டிலே போஜனபந்தியிருக்கையில், அநேக ஆயக்காரரும் பாவிகளும் வந்து, இயேசுவோடும் அவர் சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள். 11. பரிசேயர் அதைக் கண்டு, அவருடைய சீஷர்களை நோக்கி: உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம்பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள். 12. இயேசு அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. 13. <u>பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்;</u> நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்.***

***இரக்கமும் தியாகமும்.***

*இரக்கத்திற்கான எதிர்பதம் தியாகம்.*

*13ஆம் வசனம் ஓசியா புத்தகத்திலிருந்து மேற்கோள் காண்பிக்கிறது.*

***ஓசியா 6:6, பலியை அல்ல இரக்கத்தையும், தகனபலிகளைப்பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும், விரும்புகிறேன்.***

*தேவன் சிலரை அவர்களுடைய அன்பானது புல்லின் மேலிருக்கும் பனித்துளி என்று குற்றஞ்சாட்டுகிறார். அது காலைவேளையில் ஒரு குறிப்பட்ட அவகாசம் வரை இருக்கும். அத்துடன் மறைந்துபோய்விடும். மீதியாயிருப்பது வெறுமையான தகனபலிகள் மாத்திரமே.*

*ஜனங்கள் தங்கள் இருதயத்தில் ஜீவனுள்ளவர்களாய் இருக்க தேவன் விரும்புகிறார்.*

*தேவனிடத்தில் நாம் பற்றுதலாயிருப்பதையும் மற்றவர்களிடத்தில் இரக்கமுள்ளவர்களாயும் செயல்படும்படிக்கு தேவன் எதிர்பார்க்கிறார்.*

*நேர்கோட்டுப்பாதையில் நின்று சடங்காச்சாரமாய் மார்க்க ஒழுங்குகளைக் கடைபிடிக்கிறவர்கள் தேவனுக்குத் தேவையில்லை.*

*அந்நாட்களில் வரிவசூலிக்கிறவர்கள் அதிக செல்வந்தர்களாயிருந்தபோதிலும், இயேசு பாவத்திலிருந்த மக்களை மருத்துவரின் உதவியை எதிர்நோக்கும் வியாதியஸ்தலர்களாய் பார்க்கிறார். அவர்கள் வியாதியஸ்தர்கள், அவரிடத்தில் அந்த வியாதியை சுகமாக்கும் மருந்து இருக்கிறது.*

*பாவிகளோடு அமர்ந்து போஜனம் புசிப்பது என்பது சடங்காச்சார ரீதியான பாவம் என்று பரிசேயர்கள் பார்த்தனர். அவர்களுடைய வாழ்க்கை இயந்திரத்தனமான விதிமுறைகளால் ஆளுகைசெய்யப்பட்டது.*

*எல்லா வியாதிகளையும் நித்தியமாய் குணமாக்கக்கூடிய மருத்துவர் அவர்கள் மத்தியில் இருந்தாலும் சடங்காச்சார ரீதியான சுத்திகரிப்பிற்கு அவர்கள் அடிமைகளாய் இருந்தனர். எனவே மார்க்க ரீதியான இந்த சடங்காச்சார கட்டுகளே இரக்கத்திற்கு எதிரி.*

***மத்தேயு 23:23-24, மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய <u>நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்,</u> இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே. 24. குருடரான வழிகாட்டிகளே, கொசுயில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்.***

***ஆண்டவருடைய இந்த தெளிவான வார்த்தைகளிலிருந்து இரக்கத்திற்கான எதிரி யார்?***

*கொசுயில்லாமல் வடிகட்டுவதே இரக்கத்திற்கு எதிரிடையானது.*

*உங்களுடைய வருமானங்களிலிருந்தும், உங்களுடைய மளிகைப்பொருட்களிலிருந்தும் உங்களுடைய பிறந்தநாள் பரிசுப்பொருட்களிலிருந்தும் தேவனுக்கு தசமபாகத்தைக் கொடுத்து சடங்காச்சார ரீதியான ஒழுக்கத்தை கடைபிடிப்பதில் திருப்பதியடைவதும் இரக்கத்திற்கு எதிரிடையானது.*

*வாழ்க்கையின் அற்பமான காரியங்களில் திருப்தியடைவது இரக்கத்திற்கான எதிரி. அற்பமானவைகளுக்கு அடிமைப்பட்டிருப்பதே இரக்கமற்றவர்களின் சாபம்.*

*இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். ஆகையால் நீங்கள் பாக்கியவான்களாக விரும்பினால், மதரீதியான, உலகப்பிரகாரமான மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்ட காரியங்களோடு யுத்தஞ்செய்ய பழகவேண்டும்.*

*ஆபிரகாம் அவருடைய உறவினாரான லோத்துவினால் தீங்கநுபவித்தாலும் அவருக்குள் செயல்பட்ட இரக்கமே அவர் நடந்துகொண்ட கனமான செய்கைக்கு காரணமாயிருந்தது.*

*யோசேப்பின் சகோதரர்கள் அவனுக்கு பல்வேறு விதத்தில் தீங்கிழைத்தாலும் அவனுக்குள் செயல்பட்ட தெய்வீக இரக்கமே அவனுடைய செய்கையை கட்டுப்படுத்தியது. அவனுடைய சகோதரர்களுக்கு தேவையான ஆகாரங்கள் கொடுக்கப்பட்டதை உறுதிசெய்கிறான். அவர்களை மன்னித்து அவர்களின் தேவையை பூர்த்திசெய்கிறான்.*

*மிரியாம் மோசேக்கு விரோதமாய் எழும்பியபோது தேவன் அவளுக்கு குஷ்டரோகம் வரப்பண்ணுகிறார். மிரியாமின் இந்த அவல நிலையை மோசே தேவனிடத்தில் கொண்டுசெல்லுகிறார்.*

***எண்ணாகமம் 12:13, அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: என் தேவனே, அவளைக் குணமாக்கும் என்று கெஞ்சினான்.***

*தாவீது சவுலின் ஜீவனைப் பாதுகாக்கிறார்.*

*இரக்கமற்ற உலகத்து மக்கள் தங்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு செயல்பட்டு தங்களுக்கு எது நல்லது என்று பார்த்து செயல்படுகிறவர்கள் மத்தியில், தேவன் தன்னுடைய இராஜ்யத்தின் புத்திரர்களை இரக்கத்தோடும் கரிசணையோடும் செயல்படும்படிக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.*

*இரக்கமில்லாத மனிதன் தீங்கானவன்.*

*இரக்கமற்ற மனிதன் கோபப்படுகிறவன்.*

*ஆனால் தேவனிடத்தில் இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாய் வந்த நாம், மற்றவர்களுக்கு இரக்கஞ்செய்வதற்காய் அழைப்பு பெற்றிருக்கிறோம். பலவீனமாகவும் திக்கற்றவர்களாகவும் தேவையோடிருக்கிற மக்களிடத்தில் பரிவு காண்பிக்கவும், அன்பை பிரதிபலிக்கவும், அக்கறை காட்டுவதற்கும் தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.*

### *2. இரக்கத்தின் ஆதாரம்?*

*தன்னுடைய ஆவிக்குரிய வறுமை நிலையை உணருகிற இருதயத்திலிருந்தே இரக்கம் வெளிப்படுகிறது. அந்த இருதயம் தன்னுடைய பாவத்தைக் குறித்து துக்கிக்க பழகிக்கொண்டது. தேவனுடைய தருணத்திற்காய் காத்திருக்கக் கற்றுக்கொண்டது. தேவனுடைய இரக்கத்தின் செயல்களில் திருப்தியடைவதற்கான நீதிக்காய் காத்திருக்கும்.*

*தேவன் நம்மை ஆசீர்வதிக்கும் இரக்கமே தேவனுடைய ஆசீர்வாதம்.*

*அது உடைக்கப்பட்ட, சாந்தகுணமுள்ள ஆவியுடைய, தேவனுடைய இரக்கத்திற்காய் பசிதாகத்தோடு இருக்கிற இருதயத்தில் ஒரு கனியாய் உதிக்கிறது.*

*நாம் மற்றவர்களிடம் இரக்கப்படுகிற குணாதிசயம் தேவனுடைய இரக்கத்திலிருந்து உருவெடுக்கிறது.*

*இரக்கமுள்ள நபராய் இருப்பதற்கு உடைக்கப்பட்ட இருதயம் கொண்ட நபராய் இருப்பது அவசியம். இரக்கத்தைக் காண்பிப்பதற்கான பெலத்தை நீங்கள் உங்கள் இருதயத்தின் மெய்யான உணர்விலிருந்து பெற்றுக்கொள்ளுகிறீர்கள். நீங்கள் அதை கடனாய் பெற்றுக்கொண்டதினால் அதை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதற்கு கடமைப்பட்டிருக்கிறீர்கள்.*

***சங்கீதம்** 136ஐ நாம் வாசிக்கிறோம். தேவன் இரக்கமுள்ளவர் அவர் கிருபை என்றுமுள்ளது.*

***சங்கீதம் 62:12, கிருபையும் உம்முடையது, ஆண்டவரே! தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாகப் பலனளிக்கிறீர்.***

*தேவன் மனிதர்களுக்கு காண்பிக்கிற இரக்கத்தை கிறிஸ்து சிலுவையில் மரித்தபோதிலிரு கையிருப்பாக வைத்திருக்கிறார். இதுவே முழுமையான இரக்கம்!*

*தேவன் நம்மீது எல்லா இரக்கத்தோடும் செயல்பட்டதால், நமக்கு கிருபையாய் வெளிப்படுகிறார். இந்த நீர்வீழ்ச்சி தற்போது வழிந்தோடுகிறது. சிலுவையிலிருந்து வழிந்தோடுகிறது.*

### *3. இரக்கமுள்ளவர்களாயிருத்தல்.*

*நாம் இரக்கத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதை நாம் அறிந்துகொண்டோம். ஆனால் அந்த இரக்கத்தை எவ்வாறு செயல்படுத்துவது?*

*தேவன் அவருடைய இரக்கத்தை நமக்கு அருளியிருக்கிறார். அதினால் இரக்கத்தைக் குறித்த தெளிவான மற்றும் ஆச்சரியமான மறுரூபமாக்கப்பட்ட புரிதலை நாம் பெற்றிருக்கிறோம். அதே இரக்கத்தை செயல்படுத்த நாமும் அழைக்கப்படுகிறோம்.*

*"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்."*

*நீங்கள் நீதியின் மீது பசிதாகம் கொண்டவர்களாய் அதை தேடினால் இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளுவீர்கள். ஆகையால் தேவனிடத்தில் நீங்கள் அதிக இரக்கத்தைப் பெற்று அதை கொடுக்கிறவர்களாயிருக்கவேண்டும்.*

*நீங்கள் கிறிஸ்தவர்களானபோது, நீங்கள் தகுதியில்லாதவர்கள் என்ற நிலையிலிருந்து தகுதியுள்ளவர்கள் என்கிற நிலைக்கு கடந்துபோவதில்லை. இன்னும் நீங்கள் தகுதியில்லாதவர்களாகவே இருக்கிறீர்கள்!*

*நாம் பாவிகளாயிருந்தோம்; இன்னும் தகுதியற்றவர்களாய், இயலாதவர்களாய், பாவிகளாகவே இருக்கிறோம் என்பதே உண்மை. ஜோதிகளின் பிதாவிடத்திலிருந்து இறங்கிவருகிற எல்லா நன்மைகளும் இரக்கத்தின் பரிசே.*

*இங்கே ஒரு சுழற்சியை நாம் பார்க்கிறோம்.*

*நீங்கள் இரக்கத்திற்காய் கெஞ்சினீர்கள், தேவன் அதைக் கொடுத்தார். அவர் உங்கள் இருதயத்தை மறுரூபமாக்கினார். நீங்கள் இரக்கமுள்ளவர்களாய் மாறினீர்கள். நீங்கள் அதைக் கொடுக்கிறீர்கள். அவர் இன்னும் அதிகமாய் உங்களை இரக்கத்தினால் நிரப்புகிறார்.*

*இதுவே நம்முடைய இரட்சிப்பு.*

*ரோமர் 12:1, **அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.***

*ரோமர் 1ஆம் அதிகாரத்திலிருந்து 11ஆம் அதிகாரம் வரைக்குமுள்ள அனைத்தும். நீதிமானாக்கப்படுதலிலும் பரிசுத்தமாக்கப்படுதலிலும் மற்றும் மகிமைப்படுத்தப்படுதலிலும் தேவன் தன்னுடைய இரக்கம் அனைத்தையும் கொடுக்கிறார். அவைகள் அனைத்தும் அவருடைய மனவுறுக்கத்தின் பிரதிபலிப்புகள்.*

*அவருடைய பரிவின் பரிசுகள். அவர் தேவையுள்ளவர்களை பொருட்டாய் எண்ணுகிறார். ஒதுக்கப்பட்ட மற்றும் உடைக்கப்பட்ட மக்களுக்காய் கரிசணையோடு செயல்படுகிறார்.*

***புலம்பல் 3:23, நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. 23. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரியதாயிருக்கிறது.***

*இவைகள் அனைத்தும் தேவனுடைய இரக்கம் என்னும் குணாதிசயங்களுக்குள் பொருந்துகிறது.*

*இயேசு எதிர்கொண்ட பரிசேயர்களைப் பாருங்கள். அவர்கள் வாழ்க்கையைக் குறித்து வித்தியாசமான புரிதலையுடையவர்களாயிருந்தனர். தரித்திரரை ஒடுக்குவதே அவர்களின் நோக்கமாயிருந்தது.*

*அவர்கள் ஆலயத்தில் தர்ம காரியங்களை செய்தனர். அவ்வாறு செய்யப்பட்ட தரும காரியங்கள் தரித்திரருக்கு போய் சேரும். ஆனால் அதை அவர்கள் செய்வதற்கு முன்பு, தாங்கள் அதைச் செய்யப்போகிறோம் என்பதை எக்காளம் ஊதி ஊருக்கே தெரியப்படுத்தி, அவர்களின் பார்வை தங்கள் மேல் விழும்படி செய்துகொள்வர். இது எந்த விதத்திலும் இரக்கத்தின் மெய்யான சுபாவம் இல்லை. இது யார் மீதும் அன்பையோ, பரிவையோ, அல்லது கரிசணையையோ எந்த விதத்திலும் வெளிப்படுத்தவில்லை. இது மனிதர்களின் பாராட்டையே எதிர்பார்த்தது.*

*அவைகள் இரக்கத்தினால் செய்யப்படுகிறது என்பது மேலோட்டமான கருத்து. ஆனால் அவைகள் வீணான பெயர் பிரஸ்தாபத்திற்காய் செய்யப்படுகிற ஒன்று. அதே காரியங்கள் இன்றும் நடைபெறுகிறது.*

*ராஜாவின் மெய்யான குமாரன் தருமம் செய்து தன்னுடைய கையை வெறுமையாக்குவதற்கு முன்பதாய் தன்னுடைய சுய அங்கீகாரத்தைத் துறந்து தன்னை வெறுமையாக்குகிறார். அவர் திக்கற்றவர்களை குப்பையிலிருந்து விடுவிப்பதற்கு முன்பு தான் அந்த குப்பையில் நுழைகிறார்.*

*தேவன் நம் மீது இரக்கமுள்ளவராயிருக்கிறார். நாமும் இரக்கமுள்ளவர்களாய் மாறுகிறோம். தேவனிடத்திலிருந்து எல்லா இரக்கங்களையும் பெற்றுக்கொண்டு இரக்கமற்றவர்களாய் செயல்படுவது என்பது உங்களின் இரட்சிப்பிற்கு முரணான காரியம்.*

*நீங்கள் இரக்கமுள்ளவர்களாய் இல்லையெனில், தேவனும் உங்களுக்கு இரக்கமுள்ளவராயிருக்கப் போவதில்லை.*

***யாக்கோபு 2:10-13, எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். 11. ஏனென்றால், விபசாரஞ்செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலைசெய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்; ஆதலால் நீ விபசாரஞ்செய்யாமலிருந்தும் கொலைசெய்தாயானால் நியாயப்பிரமாணத்தை மீறினவனாவாய். 12. சுயாதீனப்பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படையப்போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள். 13. ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்குமுன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்.***

*மத்தேயு 18ஆம் அதிகாரத்தில் ராஜாவினால் சிட்டைக்கு உட்படுத்தப்பட்ட மனிதனைப்போல தேவன் உங்களையும் சிட்சிக்கவேண்டும் என்று விரும்புகிறீர்களா?*

*அப்படியென்றால் மற்றவர்களுக்கு இரக்கம் செய்வதை நிறுத்திவிடுங்கள், தேவனுடைய சிட்சிப்பு உங்களுக்கு வரும். ஒவ்வொரு நாளும் அவருடைய புதிய கிருபைகளை காலைதோறும் பெற்றுக்கொண்டு அதை நம்மை சுற்றியிருக்கும் எவருக்கும் பகிராமல் இருப்பது எவ்வளவு முரண்பாடான காரியம்.*

***1945ஆம் ஆண்டில் கார்ரி டென் பூம்.***

***1993இல் இவா கோரா***

*விசுவாசிகளாய்,*

- *நம்முடைய ஆவிக்குரிய வறுமையை தொடர்ந்து உணருவோம்.*
- *நம்முடைய பாவங்களைக் குறித்து தொடர்ந்து துக்கிப்போம்.*
- *தேவனை கனவீனப்படுத்துகிற கிரியைகளினால் இன்னும் வெட்கத்தையும் குற்றமனசாட்சியையும் அனுபவிக்கிறோம்.*
- *இன்னும் நீதியைக் குறித்த பசிதாகத்தோடு அதை நாடுகிறோம். இயேசுவின் நீதியுள்ள சுபாவத்தின் பங்காளர்களாய் மாறும்பொருட்டு அதை நாம் செய்கிறோம்.*

*நாம் தேவனுடைய இராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் தேவனுடைய இரக்கத்திற்கு பாத்திரராவதுபோல, ஒவ்வொரு நாள் காலையும் தேவனிடத்திலிருந்து தொடர்ச்சியாய் இரக்கத்தைப் பெறுகிறோம்.*

***மத்தேயு 6:14-15, மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். 15. மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.***

***உங்களுக்கு துன்பமான வாழ்க்கை வேண்டுமா?***

*மன்னியாதிருங்கள்.*

*அது உங்களை துன்பத்திற்கு நேராய் வழிநடத்தும்.*

*உங்கள் சதையை நீங்களே தின்று, வேறொருவர் உங்களை துன்புறுத்தி, காயப்படுத்தி, உங்களையும் உங்களுடைய பிள்ளைகளையும் திக்கற்றவர்களாய் விட்டுவிட்டார்கள் என்று பழிவாங்குகிற சிந்தையோடு காத்திருக்கிறீர்கள்.*

*மன்னியாதிருக்கிற கடினமான குணாதிசயம் உங்களுக்குள் எவ்வாறு கசப்பை உண்டாக்கி, உங்களுடைய மகிழ்ச்சியை களவாடுகிறது!*

*முடிவுரை:*

*தேவனுடைய இந்த இரக்கத்தைக் குறித்து அகஸ்டின் பெருமிதம் கொள்ளுகிறார் என்பதை அவருடைய உணவு உட்கொள்ளும் அறையில் எழுதி வைத்திருக்கும் வாசகத்தைக் கொண்டு அறியலாம். அந்த வாசகம் இதுதான்:*

***"மற்றவர்களை குறைசொல்ல விரும்புகிறவர்களுக்கு இந்த உணவு மேஜையில் இடமில்லை. அவர்கள் உண்ணாமல் இருக்கட்டும்."***

*முதலும் முக்கியமுமான கருத்து என்னவென்றால், பாவிகளின் ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதின் மூலம் அவர்களுக்கு தெய்வீக இரக்கத்தை நாம் அறிமுகப்படுத்தவேண்டும்.*

*நீங்கள் செய்யும் அதிகப்பட்சமான இரக்கத்தின் செயல்பாடு இதுவே. நாம் மக்களை நீதிமான்களாக்கும் பாதையில் வழிநடத்துவதின் மூலம் அவர்களுக்கு இரக்கஞ்செய்வோம்.*

*மக்களின் தேவைகளை சந்திப்பதின் மூலமாகவும், அவர்களுக்காக ஜெபிப்பதின் மூலமாகவும் அவர்களிடத்தில் மன்னிப்பை செயல்படுத்துவதின் மூலமாகவும் அவர்களுக்கு நாம் இரக்கம் காண்பிக்கமுடியும்.*

*ஆகையால் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதின் மூலம் நாம் இரக்கத்தை காண்பிக்கவேண்டும் என்று சொல்லலாம்.*

*இரண்டாவது, தேவனிடத்திலிருந்து வருகிற தொடர்ச்சியான இரக்கம். நீங்கள் இரக்கமுள்ளவர்களாய் செயல்பட்டால் தேவனுடைய இரக்கத்திற்கு பாத்திரவானாக்கப்படுவீர்கள்.*

*நீங்கள் இரக்கமுள்ள நபராய் மாற்றப்பட்டதாலும் மற்றவர்களிடத்தில் இரக்கமுள்ளவர்களாய் செயல்பட்டதாலும் தேவன் தன்னுடைய இரக்கத்தை உங்கள் மீது ஊற்றுகிறார்.*

*நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லவில்லை. நீங்கள் இரக்கம் பெறுவீர்கள். ஆனால் நீங்கள் செய்யும் நற்கிரியைகளினால் இரக்கம் பெறுவதில்லை. நீங்கள் இரக்கத்தை கூலியாய் பெறமுடியாது.*

*உங்களால் பெற்றுக்கொள்ள முடியாத ஒன்றை இரக்கம் உங்களுக்குத் தருகிறது. நீங்கள் மற்றவர்களுக்கு இரங்கினால் தேவன் உங்களுக்கு இரங்குவார்.*

***சங்கீதம் 86:3, ஆண்டவரே, எனக்கு இரங்கும், நாடோறும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.***

***சங்கீதம் 23:6, என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.***